ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

================================================================================

## அறிவுரை 15. அபசாரத்திற்கஞ்சிடுவீர்.

மிகவும் பயப்பட வேண்டிய விஷயங்களில் ஒன்றாகும் அபசாரப்படுவதென்பது.

राजदारापराधम् (ராஜதா$_3$ராபராத$_4$ம்) போலே பாகவதாபசாரம்.

ம்ருத்யுவின் கடைவாயிலே அகப்பட்டாற்போலே நடுங்கி.

- ரஹஸ்யத்ரயஸாரம்.

அடியார்களிடம் பிழை புரிவதில் ஏன் பயப்படவேண்டும்? எவ்வளவு பயப்பட வேண்டும்? என்பதைச் சொல்லும் இந்த (அபராதபரிஹாராதிகாரத்து) வாக்கியத்தின் அர்த்தம்:

ராணியிடம் பிழை புரிவது போலாம் பாகவதர்களிடம் அபசாரப்படுவது. யமனுடைய பற்களிடையே சிக்கிக்கொண்ட ஜந்து போலே நடுங்கவேண்டும் அதற்கு.

ஒரே தவறை வெவ்வேறு இடங்களில் பண்ணும்போது வெவ்வேறு அளவில் தண்டனை கிடைக்கிறது. தன் பக்கத்துவீட்டுச் சிறுமியிடம் அடிக்கடி வாலாட்டும் ஒருவன் அதேபோல் ராஜவல்லபையான ராணியிடமும் ஒருநாள் நடந்துகொள்ள நேரிட்டால் அவனுக்கு என்ன நேரும்? ராமாயணத்தில் காகாஸுர விருத்தாந்தமும் இதுபோல் ஒன்றுதானே? அதுபோலத்தான் மற்றவர்களிடம் பழகுவது போல் அலட்சியமாக பாகவதர்களிடம் பழகலாகாது. பாகவதர்கள் பெருமாளுக்கு அத்யந்தம்

அனுக்கர்கள். அவர்களிடம் வெகு ஜாக்கிரதையாக, அபசாரங்களுக்குப் ப்ரஸக்தி இல்லாமல் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும். உலகில் பலிஷ்டர்களைச் சார்ந்தவரிடம் நமக்கு இருக்கும் முன்னெச்சரிக்கை ஸர்வசக்தனின் அன்பர்களிடமும் இருக்கவேண்டியது இயற்கைதானே? மரணம், சித்திரவதை இவற்றுக்கு அஞ்சுவது போல் பாகவதாபசாரத்திற்கும் அஞ்ச வேண்டும்.

*****************